பெரியகோவிலும் ::

மாவட்ட ஆவணக் காப்பகம்
18 அக 1993
நடப்பு எண்



தஞ்சாவூரும்

V 21193
N60
194143

விலை ரூ 3-00.

பெரியகோவிலும் : : :

மாவட்ட ஆவணக் காப்பகம்
திருச்சிராப்பள்ளி
18 அக 1993
கடப்பு எண்



: : : தஞ்சாவூரும்

முன்னுரை.

மண்ணிற் சிறந்த பொன்னாடு - புகழ் மலிந்த புனித நாடு - அனைவரும் போற்றும் புதுமை கொழிக்கும் நாடு பொன்னியாறு தன் மணலை எல்லாம் பொன்னாகக் காட்டிச் செந்நெல் விளைந்தோங்கிச் செழிக்கும் வளநாடு தஞ்சம் என்போரை அஞ்சேலெனும் தஞ்சை மாநாடு. எத்துணை யெத்துணைச் சிறப்புப் பொருந்திய தென்று இயம்பமுடியாத அத்துணைச் சிறப்பும் கொண்ட இந்நாட்டை முன்னாளில் பலநாடுகளையும் வெற்றிக்கொண்ட முதலாம் இராஜராஜ சோழன் அரசாண்டு அன்றும் இன்றும் என்றும் அணையா விளக்கென ஐந்து கண்டங்களும் புகழ் எடுத்த தஞ்சை இராஜராஜேஸ்வரமுடையாரின் பேரம்பலமாம் பெருந்திருக்கோயிலை அறியாரோ ஆவல்கொள்ளாரோ இல்லையென்னற் பொருந்தும் இப்பெருகற்றளிக்கு உற்றாராக நாம் இருப்பதாலும் அவண் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பற்றியும் அனைவரும் அறிந்துய்வான் வேண்டி இந்நூலை எழுதினேன் அன்பர்களின் ஆதரவு இப்புத்தகத்திற்கு தினமும் வளர்ந்து பலராலும் ஆதரிக்கப்படுவது குறித்து மகிழ்கின்றேன். இதுவுமன்றி வேறுசிலவற்றை எழுதும் போதும் தஞ்சை கோயிலின் சிறப்பினை ஒருவாறு சேர்த்தே எழுதும் வழக்கம் நமக்குண்டு ஆராயு வல்லுனர் இன்னும் பெரிதாக இதைப்பற்றி வெளியிடுவார்களென நம்பி பலபணிகளிலும் ஈடுபாடுடைய நாம் இதை முடிந்த அளவில் வெளியிட்டிருக்கிறோம் அறிவுடையார்களும் அன்பர்களும் ஏற்க.

தஞ்சாவூர்
25-10-60

K. V. P.

கோயில்



வெளிப்புற வடகிழக்குத்தோற்றம்

மன்பதை தோன்றிய மக்களின் சரீரமாகிய கோயிலின் சாயா சித்திரங்களே புறத்தே காணும் திருக்கோயில்கள் பலவும், யோகிகள் முனிபுங்கவர், ஞானிகள் பலரும் அவ்வப்போது ஆலயங்களில் புகுந்து இறைவனை வழுத்திச் செல்வார்களாகலான் அன்னார்களின் பரிசத்தால் இடன் தூய்மையுறுவதோடு ஆலயவெளியில் அவர்களது பரிசுத்த எண்ணங்கள் அணுவுக்கணுவாய்பிரிந்து நிறைந்து இயங்கும் அத்தன்மையோரின் வழிபாட்டானும் சிற்பியின் தெய்வீக சக்தியாலும் மூல விக்ரகங்கள் எழில்பெற்று விளங்கும் ஆகவே ஆலய வழிபாட்டை அனுதினமும் சிரத்தையுடன் செய்து வருவோர் மனதை ஆங்குநிறைதூய எண்ணங்கள் தாக்கி ஊக்கந்தர மூர்த்திகரம் மிக்க சிலைகளும் அன்னாருக்கு அனுக்கிரகம் செய்ய உள்ளும் புறனும் ஒத்த சாக்ஷாத்

காரம் வாய்த்து சிறந்த அனுபூதிமான்களாய்த் திகழ்வது திண்ணம். கோலக்கோபுரக் கோகரணஞ் சூழாக் காற்களாற் பயனென் எனும் சான்றோர் முதுமொழியும் உண்டு.

கோவில் கட்டிய சோழ மன்னன்

சூரியகுலத் துதித்தவரும், வேதகாலத்திற்கு முற்பட்டவரும், படைப்புக் காலந்தொட்டு இருப்பவரும், சரித்திராரம்பத்திற்கு முற்பட்டவரும், பாரதப்போரில் தருமனுக்கு உதவிபுரிந்தவரும் வள்ளன்மை சமயப்பற்று



பின்புற தென்மேற்கு மூலைத்தோற்றம்

இவைகளில் உலகப் பிரசித்திப்பெற்றவரும், கோவில்கள் பலபல அமைத்து மகிழ்ந்தவரும் அன்றும் இன்றும் புகழுதற்கிலக்காய் தமிழகத்து அரசு புரிந்தவர்களும் சோழர் பெருமக்களே யாவர் எனினும் விசயாலய சோழர் காலத்திலிருந்தே சோழர் பரம்பரை நன்கு புலனாகுமெனக் கூறுவர் ஆராய்ச்சியாளர்கள்.

இச் சோழன் மரபில் இரண்டாம் பராந்தகன்—சுந்தரச்சோழன்—பொன் மாளிகை துஞ்சினதேவன் எனும் பல நாமங்கள் கொண்ட இவ்வொருவனே சிவ பக்தியிற் சிறப்புடையான் என்பது பொருந்தும் இவன உயிர் நீத்தகாலை இவனது பட்டமகிழி வானவன்மா தேவியாரும் உடன்கட்டை ஏறினர் இவர்களுக்கு குந்தவை என்னுர் பெண்ணும் இரண்டாம் ஆதித்ய கரிகாலன் அருண்மொழிததேவன என்றிரண்டு மகனும் ஆக மூவரிருந்தனர் தந்தையான சுந்தரசோழன் அரசுரிமையை மைந்தனன இரண்டாம் ஆதித்ய கரிகாலனிடம் ஒப்படைத்து தான் சிற்றம்பலத்துச் சிவனை வழிபட அங்கு சென்றுவிட்டான். இதுபோது சுந்தரச் சோழனின்



முன்புற மற்றொரு தென்கிழக்குத் தோற்றம்

தம்பியாகிய மதுராந்தகச்சோழனின் அரசுரிமை ஆவல் காரணத்தாலோ பிறவற்ருலோ ஆதித்திய கரிகாலன்

உடல் நீத்தான், அதுபோது அரசுரிமைக்குத் தகுதி யான நமது முதலாம் இராசராசசோழன் தன் சிற்றப் பனின் எண்ணம் பூர்த்தியாகுமாறு அண்ணனுக்கு முடி சூட்டி தான் இளவரசனுக இருந்தான் மதுராந்தகனின் ஆட்சி சில ஆண்டுகளே போக 986 ஜூன் அல்லது ஜூலை மாதம் 23ம் தேதியாகிய நன்னுளில் நமது மன்னர் மன்னன் முதலாம் இராஜராஜ சோழன் சிங்காதன மேறினன். சில ஆண்டுகள் நாட்டின் நலனை கவனித்து படைபலம் பலவற்றை சேர்த்துப் பிறநாடுகளையும் தீவு களையும் தன் ஆணையின் கீழ்கொண்டுவந்தும் மும்முடி பூண்டு அரசு புரிந்தான் இவன் தன்-அரசாட்சி 28 ஆண்டு களே எனினும் 19ம் ஆண்டில் சிதம்பரத்திற்கு நிபந்தங் கள் பல இயற்றி வழிபட்டமை காரணத்தால் அங்குள்ள அந்தணர்களால் இராசராசன் சிவபாதசேகரன் என்னும் பட்டமும் பெற்று அப்பெயர் காரணத்தால் தஞ்சையில் இராஜராஜேச்சுரத்தை கி. பி. 1003லிருந்து 1009 வரை எடுத்து முடித்தான் இவன் இராஜ இராஜேஸ்வரத்தில் வைத்திருந்த மாளாக் காதற்கறி குறியாய் இவன் இட்ட நிபந்தங்களும் பொன்னுபரணங் களும் பூசை கலன்களும் என்பதை பிறிதோர் பக்கங் காண்க.

இராஜராஜேஸ்வரம்

இராஜராஜேஸ்வரமென்பது பழங்காலத்து ஓர் நகரமா யிருத்தல் வேண்டும் எனறு யூகிக்க இடமிருக்கிறது ஏனெனில் இற்றைக்கும் அண்மையில் பல கிணறுகளும் செங்கற் கட்டிடச் சிதைவுகளும் காணப்படுகின்றன. இராஜராஜேஸ்வரத்துப்பெரியகோவிலானது சுற்றிலும் மலைபோன்ற பெரிய மேடுகளாலும் சுற்றிலும் காடுகள்

போன்ற மரஞ்செடி கொடிகளும் அகழி சூழப்பெற்றும் உயர்ந்த மதில்களாலும் சூழப்பெற்றது நால்வகை அரண்களால் காக்கப்படுவது போன்றும், கோபுரம் வண்ண மாடங்கள் பலபல ஒன்று சேர்ந்தாற்போல் வானுற நின்று காண்போரின் கண்நிறைந்தும் வருவோரை வருகவென்று கூப்பிடுவது போன்றும் இலங்குகின்றது. இப்பெருந்தூய காட்சியைக் கண்டனுபவிக்க வேண்டுமேயன்றி சொல்வதும் எழுதுவதும் அத்துணைப்பொருத்தமுடையனவன்று இக்கோவிலைக்கண்டு இரும்பூதெய்



இரண்டாவது கோபுரத்திலிருந்து தோற்றம்

தாத மக்கள் மாநிலத்தில்லையென்னல் சாலப்பொருந்தும் அடிமுதல் உச்சிவரை கருங்கல்லாற் கட்டப்பெற்ற இதன் சிறப்பு இதைக் கட்டிய சோழ மன்னனையுமே சிற்பிகளையும், சாரும். இது அளவையே பிரதானமாய் மட்டும் கொண்டதல்ல.

நல்ல அழகையும் பிரதானமாய்க் கொண்டதே இக் கற்றளி மன்னனது 24-ம் வயதில் அதாவது கி.பி. 1003ல் ஆரம்பித்து 1009-ல் முடிவுபெற்றது தென்னாட்டில் ஏன்? இந்தியாவிலேயே முதன் முதல் முழுதும் கருங் கல்லாற் கட்டிய பெரிய முதற்கோயிலென்பர் ஆராய்ச்சி யினர், இக்கோயில் இருப்பது நைமிசாரண்ய முனிவர் கள் தவங்கிடந்த தபோவனம் எனவும் கூறுவர்.

கோவிலின் முதல் தோற்றம்

தெற்கு வடக்காயுள்ள ரோடினின்றும் மேற்புரந் திரும்ப வில்போன்று வளைவாகவுள்ளமுதல் வாயிலின் இருபுறமும் கணபதியும், கந்தனும் காக்ஷி தருவர், மேற் புறத்து உள்ள மூர்த்திகளின் உருவங்கள் மனதைக் கவர்ந்துகொள்ளும் இவ்வாயிலில் புகுந்து போக சற்றே அண்மையில் சிற்ப வேலைகளால் அழகியதாக அகன் றும் உயரமில்லாதது போன்று 90 அடி உயரமாகவும் தோன்றும் கோபுரமெனும் கேரளாந்தகன் திருவாசல் மேற்புறத்தின் உட்பாகம் மூன்றடுக்குகளாக இணைந்திருக் கிறது இதற்கும் அடுத்து மற்றோர்கோபுரமெனும் இராச ராசன் திருவாசல் அழகுமிகுந்தும் முன்னையதினும் சிறிதே அளவில் குறைந்தும் பதுமைகளால் தாங்கப் பெற்றது போன்றும் அடிமுதல் சிற்பங்கள் நிறைந்தும் இருக்கிறது. இங்கு காப்பும் கதவுகளும் உண்டு உட்புறம் 250 அடி அகலமும் 500 அடி நீளமும் கொண்டு கருங்கல்லானும் செங்கல்லானும் பாவப்பெற்ற பிரகார மானது ஒரே வெட்டவெளி போன்றும் தோன்றும், திருச்

பாரிசத்துயாகசாலை. பாகசாலை, பண்டகசாலைபோசன சாலையும். மேல் வடபாரிசத்து பரிவாராலயத்துப் பிள்ளையார், இலிங்கவடிவில் நவக்கிரகங்கள் நூற்றெட்டு இலிங்கங்களும் அடுத்து வரிசையாகவே இலிங்கப் பிரதிட்டையும்; ஆங்காங்கு முறையே எண் திக்கு



அம்மன் சன்னிதியினின்றும் முன் தோற்றம்

வரின் உருவங்களும், சுவரகத்து அறுபத்து நான்கு திருவிளையாடல்கள் வண்ணமுறச் சித்தரித்திருக்கும் பான்மையும் காணக் கனிவுதரும் பரிவாராலயத்துப் பிள்ளையாரே கோயிற் கட்டுமுன் முதன் மூர்த்தியாய்

இடம் பெற்றாரென்பர் இம்மூர்த்தி மன்னன் மகிழிகள் முதல் சேனைத்தலைவர் போர்வீரர் ஈ.ராகயாவாராலும் தானங்கள் பலபெற்றதை அவரின் அண்மையிலுள்ள கல்வெட்டுகளால் அறியக்கிடக்கின்றது

பெருவுடையார் கோவில்

இக்கோயிலின் வாயில்தென்புறம் வடபுறங்களில் பழங் காலப்படிக்கட்டுகளாலும் எதிரே மராட்டிய மன்ன னால் 1803ல் அமைக்கப்பெற்றபுதியபடிக்கட்டுகளாலும் சிறப்புற அமைந்தது இருமருங்கும் கணபதி துர்க்கை இவர்களும் முன்புறம் பைரவர் சனிச்சுரரும் வாயிற் பாங்கில் ஒற்றைக்கல்லால் 18அடி உயரமும் 8அடி குறுக் களவுள்ள துவாரபாலகர்களும் காப்புச்செய்கின்றனர் உள்ளே நுழையும்போது வாத்திய மண்டபம் நர்த்தன மண்டபம் தியாகராஜர்கோவிலடங்கியஸ்தாபனமண்ட பம், மகா மண்டபம் பக்கவாயில் அர்த்த மண்டபம் (இது ஓர்உட்பிரகாரத்துடன் கூடியது) கருப்பக்கிரகம் இவைகள்முறையே அமைந்துஉள்ளேபருத்து திரண்டு ருண்டு மலை போன்று எழுந்து பிரகாசமாய் விளங்கும் இலிங்காகார அருள்வடிவினைக்காணக் கண்கள் ஆயிர மாயிரம் பெற்றிருப்பினும் போதாவே திருநுதற்பொட் டழகு ஓர்அழகுதான் வெண்டுகிலின் தூய்மை ஓர் தூய் மைதான் உலகில் இது ஒன்றுதான் ஒப்பற்றதுதான் செப்புதற் கெளிதற்றதுதான் இதனைக் கருவூர்ச்சித்தர் பெருமான் 'உலகெலாந் தொழவந்தெழுகதிர்ப் பரிதி ஒன்று நூறாயிர கோடி அலகெலாம் பொதிந்ததிருவுடம் பச்சோ' என்றும் "நெற்றியிற் கண்ணன் கண்ணின்

றகலா "என்றும்" என்னெடுங் கோயில் நெஞ்சு வீற்றி ருந்த எளிமையை என்றும் யான் மறக்கேன்" எனவும் தம் திருவிசைப்பாவில் பாடிக் கனிந்துள்ளார் ஆவுடை யார் 54-அடி சுற்றளவும் 6-அடி உயரமும், பாணம் 23½ அடி சுற்றளவும் உள்ளது. ஒரு லிங்கமும் தஞ்சைப்



விநாயகர் கோவிலுடன் தென்கிழக்கு தோற்றம்

பிரஹதீஸ்வரலிங்கத்துக்கு ஒப்பில்லையே எனப்பாடிய பலவரின் புகழும் போற்றுதற்குரித்தே கோயில் கட்டி முடிந்ததும் சிவலிங்கத்தினை எழுந்தருளச் செய்து ஆதி சைவர்களைக் கொண்டு மருந்து சாத்திப் பந்தனஞ்செய் வித்தபோது மருந்திளகிப் பந்தனமாகாமற் போகவே

மன்னர்மனம் வெதும்பி நின்ருன் அதுகாலே, 'கருவூர்த் தேவர் ஈண்டுவரின் நீ கருதிய கருமம் கைகூடும், என்றோர் அசரீரி வாக்குப் பிறந்தது மன்னனும் மனந் தேரி. அப்பெரியாரை காண்பதெப்படி எனபலரையும் வினவியபோதுமாற்றுருவங்கொண்டு அங்கிருந்தபோக நாதரெனும்யோகியார்வேந்தே! கவலற்ககருவூர்த்தேவ ரை ஈண்டு யாம் வர வழைப்போம் என்று உறுதிகூறி காக்கைக் காலில்சீட்டெழுதிக்கட்டி பொதிகைக்கனுப்ப போககநாதரின் ஆணைக்கியைந்து கருவூர்ந்தேவர் தஞ்சையை அணுகி திருக்கோவில் புக்கித் தம் தவ வலிமையால் சிவலிங்கத்தை ஆவுடையாருடன் செவ் வனே நிறுத்தித் தம் வாய்த் தம்பலத்தை மருந்தாக உபயோகித்து இறுகப்பிடித்திட சிவலிங்கம் தம்பனமா யிற்று (இது கருவூர்ப்புராணம் தரும்) அக்காலே இலிங் கம் இராஜராஜேஸ்வரமுடையார் என்று வழங்கலா யிற்று எனினும் ஆடவல்லான் தக்ஷிணமேருவிடங்கள் என்னும் திருநாமங்களும் பிற்றை ஞான்று பெருவுடை யாரென்றும், அம்மைக்கு உலக முழுதுடையாள் என் றும் வழங்கலுறுகின்றது. கருவூர்ச்சித்தர், இலிங்கத் திற்கு மருந்து சாத்தி ஏனையவற்றை ஆதிசைவர்களேக் கொண்டே செய்யுமாறும் கும்பாபிடேகத்திற்கு தேவர் களும் வருவதால் அவர்களுக்கு விடுதிக்கு இடங்களே யும் ஆக்ஞாபித்தனராம். இப்போது ஈஸ்வரமூர்த்தி காடே தேவர்விடுதியாயிற்றென்றும் கூறுவர் சிவலிங் கத்தை இராஜராஜன் நர்மதை நதிதீரத்திலிருந்து கொண்டுவந்ததாகவும். அதற்காதாரமாக இற்றைக்கும் சைத்ரத்திருவிழாவில் அஷ்டகொடியன்று தஞ்சை

அறுபத்து நான்கு மனே வேளான் செட்டிமார்கள் பிரதிநிதியை அழைப்பித்து சிறப்பிக்கும் ஐதீகம் எனச் சுட்டுவதும் பொருந்தும் நமது சாத்திரங்கள் ஈசுவர னுக்கு சூரிய சந்திரர்களை இரு நேத்திரங்களாகவும் இலக்குமி சரஸ்வதியை விணைக்குரியோராகவும் கூறும்அஃதெபோன்று இயங்கும் மகா மண்டபத்தின் இரு பக்க வாயிற்படிக்கும் உற்புறங்களில் சூரியசந்திரர்களும் வெளிப்பக்கலில் இலக்குமி சரஸ்வதியும் தரிசனக்காக்ஷி தர இருக்கின்றனர். இக்கோயில் ஏனைய இலிங்கங்கள் 252 ஆகும்.

கோபுரம்

பார்வதி சமேதரராய்ப் பரமசிவன் வீற்றிருக்கும் கைலாயத்திற்கு உத்தரமேரு என்றும்அதைப்போன்று இவ்விமானத்தின் கீழ்பாரிசத்து மண்டபத்தின் மேற் புறம் காணப்பெறும் காக்ஷியைப் பொருத்து, இதைத் தக்ஷிணமேரு என்றும் கூறுவர். இது நாற்கோண வடி வந்தாங்கி பதினைன்கு கோபுரமாடிகளுடன் 216 அடிகள் உயர்ந்து நாற்புறமும் காக்ஷியளித்தவண்ணமிருக்கிறது சுவரகத்தூண்கள், வண்ணமாடங்கள், தெய்வப்படி மங்கள் முதலியன அழகாகச் செதுக்கப்பெற்றுக் காண் போர் மனத்தையும் கண்களையும் பற்றி ஈர்க்க வல்லுண தாயுள்ளது அடித்தளம் 96 அடிசதுரமாயமைந்துள்ளது கோபுரத்தின் உச்சியும் கலசத்தின் அடிப்பாகமுமான உருண்டை வடிவமாயுள்ள கல் தூபிக்குக் கீழ்புறமுமா கிய பிரம்மரந்திரத் தளத்தில் போடப்பெற்ற ஒரே கல்லானது 80டன் நிறைகொண்டு, தஞ்சைக்கு சற்று வடக்கில் கும்பகோணம் ரஸ்தாவில் நான்குன மல்லூரத் திலுள்ள வயலூரினின்றும் சாரம்போட்டுசிகரமேற்றிய

தென்பர் பிரம்மாந்திரக்கல்லின்மேல் எண் கோணவடி வத்துடன் எழில்பெற்றிலங்கும் ஸ்தூபியின்மேலுள்ள (கலசம்) குடம் 12½அடி உயரமுள்ளது. 3083 பலம் செம்பின் நிறைகொண்டு மேற்புறம் 2926½ கழஞ்சி



வடக்கு பிரகார கோபுரத் தோற்றம்

பொற்றகடு போர்த்ததாகும். இக்குடம் வீரபத்திர ஆச் சாரியாரால் கொடுக்கப்பட்ட பஞ்சஉலோக கம்பத்தில் இறுத்தப்பெற்றதெனவும், குடம் சோழ சிங்காசனாதி பதியால் கொடுக்கப்பட்டதெனவும், தேவநாகரிபாஷை யிலும் சமஸ்கிருதத்திலும் அக் குடத்திலேயே

பொறிக்கப்பட்டிருக்கிறது பிரம்மாந்திரக்கல்லின் மூலை களின் சோடி சோடியாக வைக்கப் பெற்றிருக்கும் நந்தி கள், அம்மன் கோயிலுக்கெதிரில் திருச்சுற்று மாளிகை யில் வடமுகமாயுள்ள நந்தியிலும் சற்றே சிறுத்திருக் கும் அத்துணைப் பெரியதாகும். பிரம்மாந்திரக்கல் அழகி யெனும் ஓர் கிழவியால் கொடுக்கப்பட்டதென்றும் அதற்குப் பிரதிபலனாக இப்போதுபனகால் (தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்டு) கட்டிடத்திற்கருகாமையிலுள்ள அழகிகுளம், அழகிதோட்டம் இவைகளை மன்னனால் பெற்றாளெனவும் தெரிவதோடு தாராசுரத்திலுள்ள ஸ்ரீஐராவதேஸ்வரர்ஆலயமும் அவ்வம்மையின் வேண்டு கோளுக்கிணங்கி மன்னனால் கட்டப்பெற்றதெனவும் சிறப்புடைய நூற்கள்பலவும் கூறுகின்றன இத்தஞ்சை பெரியகோவிலின் கோபுரத்தின் தென்பாரிச கீழ்புறத் தில் பிள்ளையார், மகாவிஷ்ணு, பிக்ஷாடனர் சூலதேவர் திக்ஷிணாமூர்த்தி, மார்க்கண்டேயர் நடராஜர்விக்கிரகங் களும், மேற்பாரிச கீழ்புறத்தில் லிங்கோத்பவர், அர்த்த நாரீஸ்வரர் விக்கிரகங்களும் வடபாரிச கீழ்புறத்தில் கங்காதரர், கல்யாணசுந்தரர், மஹிஷாஸுரமர்த்தினி விக்கிரகங்களும் அப்பக்கத்திலுள்ள கோமுகத்தின் மேற்புறம் அடுக்கடுக்காயுள்ள மூன்று தளங்களிலும் மேற்புறம்நோக்க மூன்றாவது விக்கிரகத்தின் சிரசிற்கு மேலுள்ளவட்டமானபிரபாவளியின் மத்தியில்தொப்பி யணிந்த ஓர் ஐரோப்பியரின் சிரசும் உள்ளது. காஞ்சி புரத்தினின்றும்வந்த பத்தியிற்சிறந்த சிற்பிதீர்க்கதரிசி போன்று வரும் பொருளுரைப்பான் வேண்டி சோழ, நாயக்க மகாராட்டிர ஆங்கிலேய மன்னர்கள் முறையே அரசுபுரிவர் என்பதை அறியச்செய்தான் என்பர் ஒரு

சாரர் 17-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலிருந்த நாயக்க மன்னனது தோழர் டென்மார்க்கு தேசத்து ரோலண்டு கிரேப் என்பார் ஒரு சாரார். மார்க்கோ போலோ என்பார் மற்றொரு சாரார். ஆனல் சோழர் காலத்திலிருந்தே பிறநாட்டு வியாபாரத்தொடர்பிருந்தமையால் யாரோ ஓர் ஐரோப்பிய வியாபாரியின் உருவமே சிறப்பிக்கப் பட்டதெனத் துணிந்து கூறல் பொருத்தமாகும்.



வடமேற்குப்பிரகாரம்-ஆறுமுகன் அருளுறை இல்லம் முருகன் ஆலயம்

இக்கோவில் மேற்குப்பிரகாரத்தில் வடகோடியில் 45-அடிசதுரமுள்ள அடித்தளமும், 55-அடிஉயரமுள்ள கோபுரமும் அமையப்பெற்றது. சிற்ப நுட்பங்கள் மிக மிகச்சிறந்து விளங்குவதுநாவலரின் எழுத்துவன்மைக்

வன்மைக்கும் பாவலரின் புகழ் வன்மைக்கும் அப்பாற் பட்டது. சுவரகத் தூண்கள் பார்ப்போர் மனதைப் பற்றிஈர்க்கவல்லது தென் இந்தியாவில் அன்றி இந்தியா வில் ஏன் ? உலகிலேயே இம்மாதிரியான வேலைப்பாட மைந்த கோயில்கள் இல்லையென்று துணிந்து கூறல் பொருந்தும் அழகில் தனக்குவமை தாமே என்றியம்பு மாதிரி சிற்றுளி கொண்டு அத்துணைச் சிறப்புடன் செய்த சிற்பியின் கைத்திறனைப் புகழ கோயிலின் பின் புறமுள்ள ஊசிநுழையும் துவாரங்களே ஓர் எடுத்து காட்டாகும், இங்குள்ள முருகனின் ஆறுமுகஉருவம், மயில், திருவாச்சி யாவும் ஒரே சிலையில் செதுக்கப் பெற்றது. ஒவ்வொரு அணுவும் தனித்தனி வருணனைக்கு இலக்காய் இருக்கின்றது. முருகன் வரப்பிர ஸாதியாய்அவதரித்த அருணகிரிநாதரும் தான் இங்கு பாடிய மூன்று திருப்புகழிலும் ப்ரம்மா, விஷ்ணு இருக் கின்ற இடங்களிலும் உயர்வானதென்றும். தன்னை வந்து அபயம்என்போரை அஞ்சேல்என்று காப்பதற்கு கருணையுடன் எழுந்தருளியிருப்பதாயும் புகழ்ந்திருக் கும் பாக்களை மற்றோரிடம் காண்க. வாயிற்படியி லுள்ள துவாரபாலகர் இருவரும் எழிற்பெற்றிலங்கு வதைக்காண இரும்பூது தரும்.

பெரியநாயகி அம்மன்

இக்கோயில், ஆலயத்தின் வடபாலுள்ள சிவகங்கைத் தோட்டத்தில் இருந்ததெனவும் பிறகு ஓர் நாயக்க மன்னனால் இடிக்கப்பெற்றும். மற்றோர் நாயக்க மன்ன னால் கட்டப்பட்டும் ஆயதுஎன்பது அறியப்படுகின்றது இவ்வுமா பரமேசுவரி மிக்க இலாவண்ணியத்துடன்

உருவிற் பெரியவளாய்த் தென்முகம் நோக்கி அருள் சுரக்கும் திருக்கோலத்துடன் விளங்குகின்ருள் இக்கோயில் நிர்வாக சபை உண்டு இக்கோயிலுக்குச் சோழர் காலத்திலும் நாயக்கர்காலத்திலும் இரண்டாம்



வடகிழக்குபிரகாரம் அம்மன் கோவில் தோற்றம்

சரபோஜிகாலத்திலும் கும்பாபிடேகம் நடந்திருக்கிறது ஆனல் 7—2—51ல் இக்கோயில் கலசம் திருட்டுப் போய்விட்டபடியால் 11—3—51ல் வெற்றிவேல் அச்சுக் கூடம், வெற்றிவேல் பேக்கரி, வெற்றிவேல் டைப் பவுண்டறியார்களால் புதியகலசஞ் செய்து கும்பா பிடேகம் செய்யப்பட்டதுடன் அங்கு தக்ஷணமூர்த்தி கோயிலின் கலசம் பலவருடங்களாய் இல்லாதிருந்ததால் அதற்கும் கும்பாபிடேகம் செய்யப்பட்டது

நந்தியெம்பெருமான்

இறைவன் சந்நிதிக்கெதிரே உயர்ந்த மேடைமண்டபத்தில் 25டன் நிறையும் 12அடி உயரமும் $19\frac{1}{2}$அடி நீளமும் $8\frac{3}{4}$அடி அகலமும் கொண்டு ஒரே கல்லினால் செய்யப் பெற்ற நந்தி அருளோடு விளங்குகின்றது. இது திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த பெரம்பலூர் தாலுக்காவிலுள்ள பச்சை மலையினின்றும் கொண்டுவரப்பட்ட ஒரே கல்லில் செய்தது இந்நந்தி மண்டபத்தூண்களில் நாயக்க மன்னர்களின் உருவங்கள் இருப்பதால் மண்டபம் மட்டும் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டதெனக்கருத இடமுண்டு. இந்நந்தி நாளடைவில்



வளர்ந்து கொண்டிருந்ததெனவும், முதுகில் இருப்பாணி செருகப்பெற்று நிலைபெற்றதெனவும். இதற்குள் மண்டுகம் (தேரை) இருந்ததெனவும் பிறகு அத்தேரையை

எடுப்பித்து நடராஜா கோவிலுக்கு மேற்புறமுள்ள குளத்தில் (இப்போது கிணறு) விடப்பட்ட தெனவும் சொல்வது கர்ணபரம்பரையாக வழங்குவதை தவிர வேறு எவ்வித ஆதாரமுமில்லை.

மஹா கணபதி

ஆலயத்தில் தென்மேற் பிரகார மூலையில் 1803-ம் ஆண்டு இரண்டாம் சரபோசி மன்னனால் கட்டப்பட்ட தெனவும். பழைய கணபதியை எடுத்துவிட்டு புதிய தொன்றை இங்கு ஸ்தாபித்தாரெனவும் பிறவும் அம் மன்னன் கல்வெட்டுகளில் காணலாம் இக்கணபதி இங்குள்ள அறுமுக வள்ளலுறு போன்று வனப்பு வாய்ந்தது என்பது மிகமிகப் பொருந்தும் ஆனால் இக்கணபதி கோயில் கட்டுமுன் பரிவாரலாயத்துப் பிள்ளையாரே முதற்கடவுளாயிருந்தவர் என்பது உண்மை.

ஆடவல்லான் நடராஜர்

இக்கோயில் பிரகாரங்களின் வடகிழக்கு மூலையி லுள்ளது. மறைகள் கூறும் அளவில் அமைந்தது. பஞ்சலோகத் திருமேனி, மக்களின் மனக்கண் மாசு நீங்குவது போன்றொளிரும் இராசராசன் இம்மூர்த்தி யிடம் வைத்த பேரன்பிற்கறிகுறியாக கஞ்சி அளக்கும் கலயமுதல் பலவற்றிற்கும் ஆடவல்லான் என்ற நாமத் தையே சூட்டியுள்ளான். இம்மூர்த்தி மார்கழித் திரு ஆதிரை நாள் சேவிக்க இனிமை தரும்.



மேற்புற பிரகாரத்தில் கருவூரார் ஆலயம்

இக்கோயில் மேலைப்பிரகாரத்தின் மத்தியில் இருக்கிறது இச்சித்தர்பெருமானின் இருக்கையும் அருட்பொலிவும் காணக்காணத் திகட்டாவண்ணம் உள்ளது இன்னாரே பொன்னம்பலத்துப் பொலிவுறும்நடேசரைச் செய்து வைத்தாரெனப் போகர் நூல் கூறு நிற்கும் இவரை ஓர் பொற்கொல்லரென்றும் அந்தணரென்றும் கூறுவர் ஆனால் மூல லிங்கத்தைப் பிரதிட்டை செய்து இப்போது தனக்கென இருக்கும் கோயில்மேடைமீது தவஞ்செய்து கொண்டிருந்தாரெனவும் கூறுவர் இன்னார் முதலாம் இராசராசன் காலத்தும் முதலாம் இராஜேந்திரன் காலத்தும் இருந்து தஞ்சை கங்கைகொண்ட சோழபுரம் முதலிய பலவிடங்களில் திருவிசைப்பாப் பாடியுள்ளார் இக்கருவூரார் கோயில் கட்டுமுன் மேடையொன்றே இருந்தது.



வடமேற்கு பிரகாரத்தின் கோவிலுள்ள
ஆறுமுகக்கடவுள்
[ஒருபடத்தினின்றுஎடுக்கப்பட்டது]

தென்பதும், சுமார் நாற்பான் ஆண்டுகட்கு முன்னர்த் தஞ்சையிலிருந்தஓர் ஒய்வுபெற்ற போலீஸ் யாதவநரை மூதையரால் இக் கருவூரார் கோயில் கட்டப்பெற்ற தென்பதும் 1926-ல் மீண்டும் அக்கோயிலைச் சிறிது பெரிதாக்கி கருவூரார் செப்புத் திருமேனி செய்வித்து கும்பாபிடேகஞ் செய்தனர் என்பதும் பலருமறிவர் முற்றுந் துறந்த பற்றற்ற கருவூராரின் திருவிசைப்பா காவிற்கும் மனத்திற்கும் இனிமைதரும்.

முகவுரை.

மலர் தலையுலகில் மண்ணேபொன்மயமான மாபெருங் காவிரி இடையருது ஒழுகும்வளப்பங் கண்டசோணுடு அன்றும் இன்றும் இன்பம் பயக்கும் இயல்பினை என்னென்போம்! தன்னகத்தே பல கலைகளையும் கொண்ட தோடன்றித் தன் அருமைக் குழந்தைகளையும் வெளி நாடுகளுக் கனுப்பிச் சிறப்புறச்செய்யும் நற்செயலை நமது சோணுடே தலைமுறை தலைமுறையாகச் செய்து வரும் பெருந்தொண்டெனல் மிகையாகாது.

இந்நாட்டின் தலைநகரான தஞ்சமென்ருேர்க்குத் தஞ்சம் தருவான் இருக்கும் தஞ்சாவூர் தன்னகத்தே பல கலைக் களஞ்சியங்களையும் அடக்கியிருப்பது ஐந்து கண்டத்தவரும் கண்டு இரும்பூதெய்தும் சிலவற்றினைத் தஞ்சை சீனியர் பிரின்ஸ் ஸ்ரீமந்த் ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாஹேப் அவர்களுடனும் அன்னுர் மைத்துனர் ஸ்ரீ கிருஷ்ணுஜி மாடிகேராவ் சாஹேப் அவர்களுடனும் பலநாள் உரையாடியபொழுது அறிந்த அவற்றினை ஒரு புத்தகமாகவெளியிடுவதன்றி நமது ஆராச்சியால் ஆனது எதுவுமில்லை ஆகையால் அறிவுடையன்பர்கள் குற்றம் போக்கி நற்றங்கொள்ள வேண்டுகின்றேன்.

தஞ்சாவூர்,
25—10—60.

K. V. பக்கிரிசாமி